வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் –செங்கேணி பழனி

தேதி 17.02.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, உத்தரவாதம் கோராமல், 100 கோடி ரூபாய் வரை, கடன் வழங்கும் திட்டத்தை, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், இன்று தொடக்கி வைத்தார்.

புதுடெல்லி ரயில் நிலையத்தில், கூட்ட நெரிசல் போன்ற அசம்பாவிதங்களை தவிர்க்க, வடக்கு ரயில்வே நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின், வரும் 21, 22 ஆகிய தேதிகளில், கடலூர் மாவட்டத்தில் 2 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

பிரதமரின் மீனவர் நல ஆதரவு திட்டத்திற்கான இணைய தளத்தில் மீனவர்களை பதிவு செய்யும் சிறப்பு முகாம், புதுச்சேரி அரியாங்குப்பத்தில் இன்று நடைபெற்றது.

---

*நிர்மலா* (15)

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், தங்களுக்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்க, உத்தரவாதம் தராமலேயே 100 கோடி ரூபாய் வரை கடன் பெற ஏதுவாக, அரசால் உருவாக்கப் பட்டுள்ள, பரஸ்பர கடன் உத்தரவாதத் திட்டத்தை, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், மும்பையில் இன்று தொடக்கி வைத்தார். மத்திய பட்ஜெட்டில் கடந்த 3 ஆண்டுகளில், சிறு-குறு மற்றும்

நடுத்தர தொழில் துறைக்கு வழங்கப்படும் முக்கிய கவனத்தை மேலும் ஊக்குவிப்பதாக இத்திட்டம் அமையும் என்று அவர் கூறினார். இந்தியாவின் முதலீட்டாளர்கள் தற்போது நல்ல லாபம் ஈட்டி வருவதாகவும், இதற்கேற்ற சூழல் நாட்டில் நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார். பாதுகாப்பு உற்பத்தித் துறையை, சாதகமான கொள்கைகள் மூலம் அரசு ஆதரித்து வருவதால், இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி, 24 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி, அதிகரித்து வருவதாக நிதியமைச்சர் கூறினார். பாதுகாப்பு உற்பத்தித் துறையின் முக்கிய கேந்திரமாக, மஹாராஷ்ட்ர மாநிலம் மேம்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

----------------------------

*நில அதிர்வு* (10)

டெல்லியில் இன்று, நில அதிர்வு உணரப் பட்டதை தொடர்ந்து, மக்கள் அமைதி காக்குமாறும், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுமாறும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். நிலைமைகளை அதிகாரிகள் உன்னிப்பாக கவனித்து வருவதாக, சமூக ஊடகப் பதிவில் அவர் தெரிவித்துள்ளார். பீகாரில், சிவான் மாவட்டம் மற்றும் அதை ஒட்டி உள்ள பகுதிகளில் இன்று அதிகாலை, நிலநடுக்கம் உணரப்பட்டதால், மக்கள் பீதியடைந்து வீடுகளை விட்டு வெளியே வந்தனர். ரிக்டர் அளவு கோலில், 4 புள்ளிகளாக இந்த நில அதிர்வு பதிவாயிற்று. ஆயினும், உயிருக்கோ, உடைமைக்கோ சேதம் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை.

----------------------------

*ரயில்வே* (15)

வரவிருக்கும் நாட்களில், புதுடெல்லி ரயில் நிலையத்தில், கூட்ட நெரிசல் போன்ற அசம்பாவிதங்களை தவிர்க்க, வடக்கு ரயில்வே நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன்படி, பிரயாக்ராஜ் செல்லும் எல்லா ரயில்களும், ரயில் நிலையத்தில் 16ஆவது நடை மேடையில் இருந்து இயக்கப்படும் என்றும், பயணிகள் உள்ளே வரவும், வெளியே செல்லவும், ஆஜ்மேரி கேட் வாசலை பயன்படுத்த வேண்டும்

என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது. வழக்கமான இதர ரயில்கள், புதுடெல்லி ரயில் நிலையத்தின் இதர நடைமேடைகளில் இருந்து இயக்கப்படும் என்றும், ஒரே நடைமேடையில் அதிக எண்ணிக்கையில் பயணிகள் கூடுவதை தவிர்க்க இதனால் ஏதுவாகும் என்றும், ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கிடையே, புதுடெல்லி ரயில் நிலையத்தில், ரயில்வே பாதுகாப்புப் படையினர் மற்றும், ரயில்வே போலீஸ் படையினரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப் பட்டுள்ளது. எந்த ரயில், எந்த நடைமேடையில் இருந்து இயக்கப்படும் என்பதை, இவர்களும் பயணிகளுக்கு எடுத்துக் கூறி வருகின்றனர்.

----------------------------

கும்பமேளா (14)

பிரயாக்ராஜில் நடைபெறும் கும்பமேளாவில், பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கலந்து கொண்டு, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். நமாமி கங்கே போன்ற திட்டங்களால், உத்தரபிரதேசத்தில் பல்வேறு கிராமங்களில் ஏற்பட்டுள்ள பெரும் மாற்றங்களை, கும்பமேளாவிற்கு வரும் பக்தர்கள் அறிந்து கொள்ள ஏதுவாக, ஸ்வச் சுஜல் கிராம் என்ற பெயரில், முன்மாதிரி கிராமம் ஒன்றை, கும்பமேளா பகுதியில், மாநில அரசு அமைத்துள்ளது. ஜான்சி, லலித்பூர் உள்ளிட்ட பகுதிகளில், நீர்ப் பற்றாக்குறை எந்த அளவிற்கு நீக்கப் பட்டுள்ளது என்பதை விளக்கும் வகையிலான பல்வேறு அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. முன்மாதிரி கிராமத்திற்கு பார்வையிடும் பக்தர்களுக்கு, தூய நீர் பிரசாதமாக வழங்கப்படுகிறது. இத்தகைய பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் கூடிய மஹா கும்பமேளாவில் பங்கேற்றுள்ள, கோவை மற்றும் புதுச்சேரி பக்தர்கள் சிலரை, அங்குள்ள எமது நிருபர் சந்தித்து பேசுகையில்....

(வாய்ஸ்)

----------------------------

தமிழ் சங்கமம் (12)

வாரணாசியில், 3ஆம் ஆண்டு காசி தமிழ் சங்கமத்தின் 3ஆம் நாளில், தமிழகத்தைச் சேர்ந்த விவசாயிகள் குழு, கங்கைக் கரையில் உள்ள அனுமன் படித்துறையில் புனித நீராடி, பழங்கால கோவில்களில் வழிபாடு நடத்தியது. கோவில்களின் கட்டிடக் கலை மகத்துவம் குறித்தும், கங்கை நதி படித்துறைகளின் வரலாறு குறித்தும், காசி பண்டிதர்கள் மாணவர்களுக்கு எடுத்துக் கூறினர். தொடர்ந்து தமிழக விருந்தினர்கள், அனுமன் படித்துறை அருகே உள்ள மகாகவி சுப்ரமணிய பாரதியார் இல்லத்திற்கு சென்று, பாரதியாரின் குடும்ப உறுப்பினர்களை சந்தித்தனர். காசியில் உள்ள காஞ்சி மடத்திற்கும் இவர்கள் சென்று, அதன் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் கலாச்சார பெருமைகளை அறிந்து கொண்டனர்.

தமிழகத்திற்கும் காசிக்கும் இடையே, பல நூற்றாண்டுகளாக ஆழமான தொடர்புகள் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

ஸ்டாலின் (14)

தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின், வரும் 21, 22 ஆகிய தேதிகளில், கடலூர் மாவட்டத்தில் 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். 21ஆம் தேதி, கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் நடைபெற உள்ள விழாவில், பல்வேறு திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். சுமார் 35 ஆயிரம் பயனாளிகளுக்கு, நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்குகிறார். தொடர்ந்து 22ஆம் தேதி, வேப்பூர் வட்டம், திருப்பெயர்ப் பகுதியில் நடைபெற உள்ள பெற்றோரைக் கொண்டாடுவோம் நிகழ்ச்சியிலும், முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் கலந்து கொள்ள இருப்பதாக, தமிழக வேளாண் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், இன்று கடலூரில், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். முதலமைச்சரின் வருகைக்கான ஏற்பாடுகளை, முன்னதாக அவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கடலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சிபி ஆதித்யா செந்தில் குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

----------------------------

முருகன் - திரிபுரா ஆளுநர் (11)

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், இன்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தரிசனம் செய்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு கடந்த 10 ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களுக்காக தமிழகத்திற்கு 10 லட்சம் கோடி ரூபாய் வழங்கி இருப்பதாக தெரிவித்தார். தமிழ் மக்கள், மொழி, மற்றும், கலாச்சாரத்தின் மீது, பிரதமர் திரு. நரேந்திர மோடி மிகுந்த மதிப்பு வைத்து இருப்பதாகவும், 3 ஆண்டுகளாக காசி தமிழ் சங்கமம் நடத்தப்படுவதே இதற்கு சான்றாகும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே, திரிபுரா ஆளுநர் திரு. நல்லு இந்திரசேனா ரெட்டி, இன்று ஸ்ரீரங்கநாதர் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். அவருக்கு, கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

-----------------------------

*மீனவர்கள்* (12)

பிரதமரின் மீனவர் நல ஆதரவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகளை மீனவர்கள் பெற ஏதுவாக, இதற்கான டிஜிட்டல் இணைய தளத்தில் மீனவர்களை பதிவு செய்யும் சிறப்பு முகாம், அரியாங்குப்பம் பர்வதவர்தினி மீனவர் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. ஏராளமான மீனவர்கள் இதில் கலந்து கொண்டு, இணைய தளத்தில் பெயர்ப் பதிவு செய்துக் கொண்டனர். மீனவர்கள் சிறு-குறு தொழில் புரிய தேவையான வங்கக் கடனையும் இதன் மூலம் பெற முடியும் என்று, புதுச்சேரி அரசின் மீன்வளத் துறை துணை இயக்குநர் திரு. ராஜேந்திரன் தெரிவித்தார். புதுச்சேரியில் இத்தகைய பெயர் பதிவு முகாம்கள் தொடர்ந்து நடைபெறும் என்றும், இது அல்லாது பொது சேவை மையங்களிலும் மீனவர் பதிவு பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார். திரு. ராஜேந்திரன் மேலும் கூறுகையில்……

**(வாய்ஸ்)**

-----------------------------

*கொசு ஒழிப்பு* (14)

புதுச்சேரியில் முதலமைச்சர் அறிவுறுத்தலின் பேரில், பொதுப் பணித் துறை அமைச்சர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற, கொசு ஒழிப்பு தொடர்பான கலந்தாய்வுக் கூட்டத்தில், கொசுக்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளுமாறு, உள்ளூர் நிர்வாகத் துறைக்கும், சுகாதாரத் துறைக்கும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. கொசுக்களால் பரவும் நோய் எவருக்கேனும் இருப்பதாக கண்டறியப் பட்டால், களப்பணியாளர்கள், அதே நாளில் நோயாளியின் முகவரிக்கு சென்று, வீட்டிற்கு உள்ளேயும், வெளியிலும், கொசு உருவாகும் இடங்களை கண்டறிந்து அப்புறப்படுத்த வேண்டும் என்றும்,

நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து உதவியுடன், புகை மருந்து அடித்து, கொசு மருந்து தெளிக்க வேண்டும் என்றும், அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது. அசுத்தமான நீர் தேங்கும் பொருட்களை பொது மக்களும் உடனுக்குடன் அகற்றி, கொசு ஒழிப்புப் பணிகளில் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என சுகாதாரத் துறை இயக்குநர் திரு.ரவிச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

----------------------------

*காரைக்கால்-காப்பீடு* (10)

காரைக்காலில், நல்லம்பல் பஞ்சாயத்து அளவிலான மகளிர் கூட்டமைப்பின் கீழ் செயல்படும், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் ஒருவரின் கணவர் உயிரிழந்ததை தொடர்ந்து, பிரதமரின் ஜீவன் ஜோதி பீமா திட்டத்தின் கீழ், வாரிசுதாரருக்கான 2 லட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகை, பாரதியார் கிராம வங்கியின் சேத்தூர் கிளை மூலமாக இன்று வழங்கப்பட்டது. காரைக்கால் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் இணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. ரங்கநாதன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். மேலும், 4 சுய உதவிக் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் குழுக்களுக்கு, மொத்தம் 31 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தொழிற் கடனும், இன்றைய தினம் வழங்கப்பட்டது.

----------------------------

*ஐபிஎல்* (9)

2025ஆம் ஆண்டுக்கான ஐபிஎல் போட்டிகள் மார்ச் 22 ஆம் தேதி தொடங்கும் என, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் இன்று அறிவித்துள்ளது. அன்றைய தினம் கொல்கத்தாவில் நடைபெற உள்ள தொடக்கப் போட்டியில், நடப்பு சாம்பியனான கொல்கத்தா, பெங்களூரு அணியுடன் மோத உள்ளது. கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் மொத்தம் 10 அணிகள், ஐபிஎல் போட்டிகளில் பங்கேற்கின்றன. இதில், சென்னை, பெங்களூரு, ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் கொல்கத்தா அணிகள் ஏ பிரிவிலும், மும்பை, குஜராத், டெல்லி, ஹைதராபாத், மற்றும் லக்னோ அணிகள், பி பிரிவிலும் இடம் பெற்றுள்ளன.

-----------------------------

இஸ்ரோ (12)

செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவும் ராக்கெட்டுகளின் மோட்டாருக்கு தேவையான திட உந்து பொருள் கலவையை தயாரிக்க, உலகில் மிகப் பெரிய கலவை இயந்திரம் ஒன்றை, இஸ்ரோ விஞ்ஞானிகள் வடிவமைத்து உருவாக்கி உள்ளனர். இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் சதீஷ் தவான் விண்வெளி மையமும், பெங்களூரில் உள்ள, உற்பத்தி தொழில்நுட்பங்களுக்கான மத்திய கழகமும் இணைந்து, இந்த இயந்திரத்தை உருவாக்கி, சாதனைப் படைத்துள்ளனர். 150 டன் எடையும், 8.7 மீட்டர் உயரமும் கொண்ட இந்த இயந்திரம், ஒரே சமயத்தில், 10 டன் அளவிற்கு திடக் கலவை உந்து பொருளை தயாரிக்க வல்லதாகும். தொலை நிலை கட்டுப்பாட்டு வசதிகளுடன் கூடிய இந்த அதிநவீன கலவை இயந்திரம், விண்வெளித் துறையில், இந்தியாவின் சுயசார்பு அதிகரித்து வருவதன் அடையாளமாகவே, அமைந்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

ஆதி மகோத்சவம் (8)

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு பழங்குடி சமூகத்தினரின் கலை-கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையிலான ஆதி மகோத்சவம், தற்போது புதுடெல்லியில் நடைபெற்று வருகிறது. மேஜர் தியான் சந்த் விளையாட்டு அரங்கில் நடைபெறும் இவ்விழாவில், 30க்கும் மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து, பழங்குடி இனத்தைச் சேர்ந்த, 600க்கும் மேற்பட்ட கைவினைஞர்களும், 500க்கும் மேற்பட்ட கலைஞர்களும் பங்கேற்றுள்ளனர். பழங்குடி உணவுக் கலாச்சாரம் தொடர்பான 25 அரங்குகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

----------------------------

தன்கர் (5)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், நாளை ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு, ஒருநாள் பயணம் மேற்கொள்கிறார். நாட்டை கட்டியமைப்பதில், தொழில் முனைவோரின் பங்கு என்பது குறித்து, ராஜஸ்தான் மாநில தொழில்-வர்த்தக கூட்டமைப்பு சார்பில், ஜெய்ப்பூரில் நடைபெற உள்ள மாநாட்டில், சிறப்பு விருந்தினராக அவர் கலந்து கொள்கிறார்.

----------------------------

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, உத்தரவாதம் கோராமல், 100 கோடி ரூபாய் வரை, கடன் வழங்கும் திட்டத்தை, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், இன்று தொடக்கி வைத்தார்.

புதுடெல்லி ரயில் நிலையத்தில், கூட்ட நெரிசல் போன்ற அசம்பாவிதங்களை தவிர்க்க, வடக்கு ரயில்வே நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின், வரும் 21, 22 ஆகிய தேதிகளில், கடலூர் மாவட்டத்தில் 2 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

பிரதமரின் மீனவர் நல ஆதரவு திட்டத்திற்கான இணைய தளத்தில் மீனவர்களை பதிவு செய்யும் சிறப்பு முகாம், புதுச்சேரி அரியாங்குப்பத்தில் இன்று நடைபெற்றது.